பக்கங்கள் 23

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 12 திங்கட்கிழமை 29.12.2025 | அதிர்வு 151 |
| --- | --- | --- | --- |

## சிறுமி டினோஜாவின் சாவுக்கு நீதி கோரி இன்று போராட்டம்



முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சையின்போது உயிரிழந்த சிறுமி டினோஜாவுக்கு 03

# பிரச்சினை அல்ல தீர்வே முக்கியம்

## பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக இரத்தாகும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையில் புதிய சட்டம்

### நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார உறுதி

"சகல விடயங்களுக்கும் குறைகளை மாத்திரம் முன்வைத்துக் கொண்டிருந்தால் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்து ஜனநாயகம், தனி மனித உரிமையைப் பாதுகாக்கும் வகையில் புதிய சட்டம் இயற்றப்படும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மீதான விமர்சனங்கள் புதிய சட்டத்தில் உள்வாங்கப்படாது. குறைபாடுகளை முன்வைப்பவர்கள் சிறந்த பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும்." 02



# இலங்கை மீண்டெழ வெளிநாட்டு உதவி போதாது; நன்கொடையாளர் மாநாட்டை உடன் நடத்துங்கள்!

## அரசிடம் சஜித் வலியுறுத்து

"இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மீண்டெழுவதற்கு இன்னும் போதுமான சர்வதேச உதவிகள் கிடைக்கப்பெறவில்லை. எனவே, சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை விரைவில் நடத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மீண்டும் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் தெரிவிக்கையில்,

"பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டுள்ள நிவாரணங்கள் விரைவில் வழங்கப்பட வேண்டும்.

முகாம்களில் உள்ள மக்களைப் பாதுகாப்பான இடங்களில் மீள குடியமர்த்துவதற்குரிய ஏற்பாடுகளும் இடம்பெற வேண்டும். பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு போதுமான உதவிகள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை. இனியும் காலம் தாழ்த்தாது, சர்வதேச கொடையாளர் மாநாட்டை நடத்த வேண்டும்.

சர்வதேச சமூகத்தின் 02






முன்னாள் அமைச்சரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிராக தற்போது குற்றப் புலனாய்வுத் துறையினர் எடுத்து வரும் நடவடிக்கை தொடர்பில் அரசாங்கம் தான் நேரடியாகச் சம்பந்தப்பட விரும்பாது என்பதை நேற்று என் பத்தியில் கோடிகாட்டி இருந்தேன்.

அவருக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் மூன்று மாத காலத்திற்கு தடுப்புக் காவல் உத்தரவைப் பிறப்பிக்கும்படி குற்றப்புலனாய்வுத் துறையினர் கோரிக்கை விடுத்த போதிலும், அதற்கு இணங்குவதற்கு பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால மறுத்துவிட்டார் 03



# பூஸா சிறைச்சாலைக்குள் இருந்து மேலும் 15 தொலைபேசிகள் மீட்பு!

பாதாள உலகக் குழு உறுப்பினர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள பூஸா சிறைச்சாலையிலிருந்து மேலும் 15 கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

பூஸா சிறைச்சாலையானது அதி உயர் பாதுகாப்பு சிறைச்சாலையாகக் கருதப்படுகின்றது. எனினும், அங்கு தொலைபேசிகள் பயன்படுத்தப்படுகின்றன என்று புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதனையடுத்து கடந்த சில நாட்களாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் சிறைச்சாலைக்குள் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டு வருகின்றது.

இதற்கமைய பாதாளக் குழு உறுப்பினர்களான பொடி லெசி , தெமட்டகொட சமிந்த, மிதிகம ருவான் உள்ளிட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறை அறைகளில் இருந்தும் தொலைபேசிகள் மீட்கப்பட்டுள்ளன.

தரையைத் நோண்டியும் ஏனைய சில பகுதிகளிலும் இவை மிகவும் சூட்சுமமான முறையில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு சிறைச்சாலை அறைகள் பல சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

டேட்டா கேபல், பவர் பேங், சிம் அட்டைகள் , சிக்னல் பூஸ்டர் உட்பட மேலும் சில உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பூஸா சிறைச்சாலையில் உள்ள சில அதிகாரிகள், குற்றவாளிகளுக்கு உதவுகின்றனர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பிரச்சினை அல்ல...

– இவ்வாறு நீதி மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நீதி அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட வரைவு தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் ஆட்சியில் ஆறு மாத காலத்தை வரையறுத்து பயங்கரவாதத் தடைச் சட்டம் உருவாக்கப்பட்டது. இந்தச் சட்டம் தனிமனித சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்துக்கு எதிராகவே பயன்படுத்தப்பட்டது. இந்தச் சட்டத்தால் நாங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டோம்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக அம்சங்கள் மற்றும் மனித உரிமைகளை உள்ளடக்கிய வகையில் புதிய சட்டம் ஒன்றை இயற்றுவோம் என்று மக்களுக்கு வாக்குறுதியளித்திருந்தோம்.

இதற்கமைய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது குறித்து ஆராய்ந்து விதப்புரைகளை முன்வைப்பதற்காக ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ச குலரத்ன தலைமையில் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

கடந்த அரசு தயாரித்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய அறிவுறுத்தல்கள், தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு புதிய சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக இரத்துச் செய்து ஜனநாயகம், தனி மனித உரிமையைப் பாதுகாக்கும் வகையில் புதிய சட்டம் இயற்றப்படும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் மீதான விமர்சனங்கள் புதிய சட்டத்தில் உள்வாங்கப்படாது. குறைபாடுகளை முன்வைப்பவர்கள் சிறந்த பரிந்துரைகளை முன்வைக்க வேண்டும்.

புதிய சட்டத்தில் மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் பாதுகாப்புடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும். சகல விடயங்களுக்கும் குறைகளை மாத்திரம் முன்வைத்துக் கொண்டிருந்தால் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியாது.” – என்றார்.

---

### இலங்கை மீண்டெழ...

கவனம் எமது நாடு பக்கம் திரும்பியுள்ள நிலையில் கூடிய விரைவில் இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும், இது தொடர்பில் அரசு அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை.

அதேவேளை, சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்குநர்களுடன் பேச்சு நடத்தி கடும் நிபந்தனைகளை தளர்த்திக்கொண்டு, புதிய ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.” – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

என்ற செய்தி சில ஆங்கில ஊடகங்களில் நேற்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

குற்றப் புலனாய்வுத் துறையினர் கேட்டுக் கொண்டமைக்கு இணங்க ஆக 72 மணி நேரத் தடுப்புக் காவல் உத்தரவு மட்டுமே அரசுத் தரப்பால் வழங்கப்பட்டிருக்கின்றது. அதற்குள் நீங்கள் எதுவும் செய்வதாயின் சட்ட ரீதியாக நீதிமன்றங்கள் மூலம் செய்யுங்கள் என்று கூறி அரசுத் தலைமை இந்த விடயத்தில் இருந்து தனது கைகளைக் கழுவிக் கொண்டு விட்டதாகத் தெரிகிறது.

டக்ளஸ் தேவானந்தாவுக்கு 2000 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பல்வேறு ஆயுதங்கள் பற்றி எல்லாம் அவரிடம் விசாரணை நடைபெறுவதாக பல ஊடகங்களில் ('முரசு' உட்பட) செய்திகள் வெளி வந்தாலும், ஆக அவருக்கு அவரது தற்பாதுகாப்புக்கு என வழங்கப்பட்ட ஒரு பிஸ்டல் குறித்து மட்டுமே குற்றப் புலனாய்வுத் துறையினர் அவரிடம் கேள்வி எழுப்பி வருகின்றனர் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

யுத்த காலத்தில் ஈ.பி.டி.பிக்குக் கையளித்த இயந்திர துப்பாக்கிகள் போன்றவை பற்றிய கணக்கு வழக்குகளை எல்லாம் அரசாங்கம் குடைந்து விசாரிக்க தொடங்கினால், அந்த அமைப்பு மாத்திரம் அல்லாமல், பல தமிழ் அமைப்புகள், அவற்றின் தலைவர்கள் எல்லாம் தடுப்புக் காவலுக்குச் செல்ல வேண்டி இருக்கும் என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. ஆனால் அவை பற்றி எல்லாம் விசாரிக்கும் நிலைப்பாட்டில் குற்றப்புலனாய்வுத் துறையோ அரசாங்கமோ இருக்கின்ற மாதிரித் தெரியவில்லை.

யுத்தத்துக்கு மத்தியில் அரசுக்கு சார்பாக இருந்த குழுக்களிடம் இருந்து மட்டுமல்லாமல், படைத்தரப்பிலிருந்தும் பெரும் எண்ணிக்கையான ஆயுதங்கள் காணாமல் போயிருக்கின்றன. அவை பற்றி எல்லாம் விசாரணை நடத்துவதாயின் தனியான குற்றப்புலனாய்வுத் துறை ஒன்றை ஆயிரக்கணக்கான அதிகாரிகளோடு நியமிக்க வேண்டியிருக்கும் என்று சம்பந்தப்பட்ட தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

ஆக, டக்ளஸ் தேவானந்தாவுக்குக் கையளிக்கப்பட்ட தனிப்பட்ட துப்பாக்கி ஒன்று பாதாள உலகக் குழுவினர் கைக்குச் சென்றது எங்ஙனம், அந்தத் துப்பாக்கி தமது கைவசம் இருந்து நழுவியமை பற்றி டக்ளஸ் உரிய தரப்புகளுக்கு அறிவிக்காதமை ஏன் என்பவை பற்றித்தான் அவர் துருவப்படுகின்றார் என அறிய வந்தது.

நேற்று கம்பஹா நீதிமன்றத்தில் பதில் நீதிவானாக கடமையாற்றிய பெண்மணி ஒருவர் முன்னிலையிலே டக்ளஸ் ஆஜர் செய்யப்பட்டார். பதில் நீதிவான் வழமையாக இத்தகைய வழக்குகளில் பிணை அனுமதி கொடுக்க மாட்டார் என்பதால் அந்த விடயம் நேற்று மன்றில் முக்கியத்துவம் பெறவில்லை.

ஆயினும், நேற்று டக்ளஸ் நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்பட்ட சமயம் அவரது தரப்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் அவரை பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும் என வாதாடினர். அதை குற்றப்புலனாய்வுத் துறையினர் வலிமையாக எதிர்க்கவில்லை என்றும் தெரிய வந்தது.

ஆயினும் பயங்கர ஆயுதங்கள் தொடர்பான சட்டம் மற்றும் அரசு சொத்தை துஷ்பிரயோகம் செய்தமை போன்ற சட்டங்களின் கீழேயே இந்த விவகாரம் பதியப்பட்டு இருப்பதால், அரச சொத்துத் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்கில் பிணை வழங்கப்பட மாட்டாது என்று பொலிஸ் தரப்பு நீதிவானிடம் சுட்டிக்காட்டியது.

அப்படியானால், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக இதே சட்டப் பிரிவின் கீழ் வழக்கு தொடுக்கப்பட்ட போது அவருக்கு எங்ஙனம் பிணை வழங்கப்பட்டது என்று டக்ளஸ் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி கேள்வி எழுப்பினார்.

எது, எப்படி என்றாலும், செவ்வாய்க்கிழமை அல்லது புதன்கிழமை டக்ளளை பிணையில் விடக் கோரும் மனு ஒன்றை கம்பஹா நீதிவான் நீதிமன்றத்திலேயே அவரது சட்டத்தரணிகள் தாக்கல் செய்வார்கள் என்று தெரிகின்றது.

டக்ளஸ் தேவானந்தாவிடம் நடத்தப்பட்ட விசாரணையின் போது மேற்படி துப்பாக்கியை பாதாள உலகக் குழுவைச் சேர்ந்தவரிடம் இருந்து 2019 இல் கைப்பற்றி விட்டதாகக் கூறுகிறீர்கள், அவர் 2020இல் சுடப்பட்டு உயிரிழந்து விட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது, 2019 இல் பெற்ற துப்பாக்கி குறித்து ஆறு வருடங்க கழித்து இப்போதுதான் விசாரணைக்கு வருவது ஏன் என்று டக்ளஸ் திருப்பிக் கேட்டார் எனவும் அறிய வந்தது.

"இல்லை. மூன்று வருடங்களுக்கு முன்னர் இது பற்றி உங்களிடம் விசாரணை நடத்தி வாக்குமூலம் பெறுவதற்காக அச்சமயத்தில் அமைச்சராக இருந்த உங்களுக்கு அப்போதைய சபாநாயகர் ஊடாகக் கடிதம் அனுப்பி இருந்தோம்." - என்று குற்றப்புலனாய்வுத் தரப்பினரால் கூறப்பட்டதாகத் தெரிகிறது.

அப்படி கடிதம் ஏதும் சபாநாயகர் ஊடாக தமக்கு வழங்கப்பப்படவேயில்லை என்று தெரிவித்த டக்ளஸ் தேவானந்தா, அது தொடர்பில் சபாநாயகர் அனுப்பிய பதிலை அல்லது அவரது விளக்கத்தை சமர்ப்பிக்க முடியுமா என்று திருப்பி கேட்டார் எனவும் கூறப்பட்டது.

ஆக, இந்த விடயம் தொடர்பில் முதலில் கம்பஹா நீதிவான் நீதிமன்றிலும், அங்கு சரிவராவிட்டால் அடுத்து மேல் நீதிமன்றத்திலும் டக்ளஸைப் பிணையில் விடக் கோரி விரைந்து மனுக்கள்தாக்கல் செய்யப்படும் என்று தெரிகின்றது.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது வழங்கப்பட்ட ஆயுதம் தொடர்பாகவே இப்போது டக்ளஸ் குடையப்படுகிறார். சந்திரிகாவின் தலைமையில் ஒரே அரசாங்கத்தின் அமைச்சரவையில் டக்ளஸ் தேவானந்தாவும், இப்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் சக அமைச்சர்களாக இருந்தார்கள் என்பதையும் குறிப்பிடடாக வேண்டும்.

* * *

யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நிறுவப்பட இருக்கும் உள்ளக விளையாட்டு அரங்குக்கு எதிராக வழங்கப்பட்ட தடைக் கட்டாணையை இரண்டு வாரங்களின் பின் நீடிக்காமல் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் விலக்கிக் கொண்டமைக்கு எதிராக பெரும்பாலும் இன்று அல்லது நாளை வடக்கு மாகாண மேன்முறையீட்டுக்கான மேல் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்படும் எனத் தெரிய வருகின்றது.

இந்த விவகாரம் வடக்கு நீதிமன்றம் ஒன்றில் மீண்டும் இந்த வாரம் சட்ட விவாதத்திற்கு உள்ளாகும் என்று எதிர் பார்க்கலாம்.

* * *

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு வரும் வார இறுதியில் நேரடியாகக் கூடி தற்போதைய அரசியல் நிலைவரங்கள் குறித்து ஆராய இருப்பதாகத் தெரிய வருகிறது. சரியாக சனிக்கிழமையால்லது ஞாயிற்றுக்கிழமையா கூட்டம் நடைபெறும் என்பதும், எங்கு, என்ன நேரத்துக்கு நடைபெறும் என்பதும் இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

ஆயினும், அரசமைப்புக் கவுன்ஸிலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறிதரனின் செயற்பாடுகள் தொடர்பில் பலத்த சர்ச்சை வெடித்துள்ள சமயத்தில் இந்தக் கூட்டம் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

* * *

## சிறுமி...

நீதி கோரி இன்று திங்கட்கிழமை ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு - சிலாவத்தை பகுதியைச் சேர்ந்த குகநேசன் டினோஜா (வயது 12) என்ற சிறுமி திடீர் சுகவீனம் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 21ஆம் திகதி சிகிச்சையின் போது உயிரிழந்தார். மருத்துவத் தவறு காரணமாகவே, இந்த இறப்புச் சம்பவித்தது என்று சிறுமியின் உறவினர்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்த விடயம் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் விவாதிக்கப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறான பின்னணியிலேயே, சிறுமியின் இறப்புக்கு நீதி கோரி, முல்லைத்தீவு மாவட்டவைத்தியசாலைக்கு முன்பாக இன்று காலை கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு வணிக நிறுவனங்கள், அழகக சங்கங்கள் எனப் பல தரப்புகளும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன. அத்துடன், ஏனையோரின் ஆதரவையும் அந்தத் தரப்பினர் கோரியுள்ளனர்.

# தமிழரசே சமஷ்டிக் கட்சி என்பதால் அதனையே வலியுறுத்துகின்றோம்!

## தலைவர் சி.வி.கே.சிவஞானம் விளக்கம்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சமஷ்டி கட்சி.ஆகவே சமஷ்டியை பற்றி நாங்கள் பேசாமல் விடுவோமா?

– இப்படி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் கேள்வி எழுப்பியமையுடன் இந்திய வெளியுறவு அமைச்சருடனான சந்திப்பின் போது தாமே அதனை வலியுறுத்தினார் எனவும் தெரிவித்தார்.

சமகால நிலைமைகள் தொடர்பாக சி.வீ.கே.சிவஞானம் நேற்றுத் தாம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருடனான சந்திப்பில் அமைச்சரிடம் மகஜர் கையளிக்கப்படவில்லை எனவும் உயர்ஸ்தானிகரிடமே மகஜர் கையளிக்கப்பட்டதாகவும் கஜேந்திரகுமார் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான சந்திப்புக்களில் அமைச்சர் மகஜரை கையேற்பதில்லை என்ற இந்திய உயர்ஸ்தானிகரகத்தின் அறிவுத்தலுக்கமைய இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பின் அடிப்படை நோக்கம், தேவையற்ற கால தமாதமாகியுள்ள மாகாண சபைத் தேர்தலை நடத்த இலங்கை அரசாங்கத்திற்கு இந்தியா வலியுறுத்த வேண்டும் என்பதே ஆகும். மாகாண சபை தேர்தலை நடத்த நானும் ஏனையவர்களும் வலியுறுத்தினோம்.

சமஷ்டியை பற்றி நாங்கள் பேசவில்லை என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தமை ஆச்சரியமளிக்கிறது.

கலந்துரையாடலை ஆரம்பித்தவன் நானே. கலந்துரையாடலின் இறுதியில் சமஷ்டியை பற்றி பேசினோம். பல விடயங்களை பேசினோம். சந்திப்பு முடிவுறும் தருணத்தில் ஜனாதிபதி



அநுர குமார திஸநாயக்கவுக்கு நாம் முன்வைத்த கடிதத்தின் நோக்கத்தை மீண்டும் ஜெய்சங்கருக்குத் தெளிவுபடுத்தினோம்.

மாகாண சபையை பொறுத்தவரை இந்தியா இலங்கையுடன் செய்த ஒப்பந்தம் மூலமே அது உருவானது. வயிற்றில் பிறந்த பிள்ளை என சொல்லவில்லை. இந்தியாவின் சிந்தனையில் வந்த பிள்ளை என்றேன். அதை வலியுறுத்தவே மகஜரும் கையளித்தோம்.

அதேபோல அந்தச் சந்திப்பில் எமது இறுதி இலக்கும் நோக்கும் கூட்டாட்சி – சமஷ்டிதான் என்பதை தெரிவித்தோம். மகஜரில் இந்த விடயம் இருக்கிறது.

நாங்கள் பொய் சொன்னோம் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சொல்கிறார். நான் உண்மையைத்தான் கூறுகிறேன். சந்திப்பில் பங்கேற்ற ஏனைய கட்சித்தலைவர்கள் இதை தெளிவுபடுத்துமாறு வலியுறுத்தினார்கள்.

சர்வதேச ரீதியில் எமது இலக்கை அடைவதற்கான ஆதரவு தேவை. இந்தியா இதற்கு உதவ வேண்டும் என சந்திப்பில் சொன்னோம்.

நான் சொன்னது பொய் என்றால் இந்தியா மறுதலிக்கும். இராஜதந்திரிகள் எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல மாட்டார்கள். செயலிலேயே அதைச் செய்வார்கள்.

நாங்கள் சமஸ்டி கட்சி. ஆகவே சமஷ்டியை பற்றி பேசாமல் விடுவோமா? நாங்கள் சந்திப்பின் பின்பகுதியில் அதனை வலியுறுத்தினேன்.

13 ஆம் திருத்தம் ஒற்றையாட்சிக்குள் முடங்கி போடும் என சொல்லி விட்டு கஜேந்திரகுமார் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவார் எனச் சொல்கிறார். இது சுய முரண்பாடு.

மாகாண சபை முறைமை தீர்வு என்றோ முழுமையாக ஏற்கிறோம் என்றோ ஒரு காலத்திலும் தமிழ் அரசுக் கட்சி சொன்னதில்லை.

உண்மைக்கு புறம்பான முறையில் பேசுவது அரசியல் ஜனநாயகத்துக்கு முரண்.

மன்னாரில் இருக்க கூடிய சூரிய சக்தி அமைப்பதில் பாகிஸ்தானை சேர்ந்த 40 பேர் பணியில் ஈடுபடுவது என்பதையும் நாங்கள் சந்திப்பின் போது தெரிவித்தோம். – என்றார்.

# ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் முத்துலிங்கம் மறைவு

(நடராஜா மலர்வேந்தன்)

ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆறுமுகம் முத்துலிங்கம் காலமானார்.

திடீர் சுகயீனம் காரணமாக பதுளை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றுத் தனது எழுபத்தெட்டாவது வயதில் அவர் காலமானார்.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக நீண்ட காலமாக குரல்கொடுத்த, ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தூணாக அவர் விளங்கினார்.

தொழிற்சங்கப் பணிக்கே தம்மை அர்ப்பணித்த முத்துலிங்கம் தனது வாழ்க்கையின் மூன்றரை தசாப்தங்களுக்கு மேலாக தோட்டத் தொழிலாளர்களின் நலன், உரிமைகள், வாழ்வாதாரம் ஆகியவற்றுக்காக இடையறாது பாடுபட்டவர்.

குறைந்த ஊதியம், தரமற்ற வசிப்பிடங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட பல நிலையான சிக்கல்களுக்கு எதிராக தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்தவர்.

அரசியல் மேடைகளைவிட தொழிலாளர்களின் வாழ்விடங்களில் நேரடியாகச் சென்று பிரச்சினைகளைக் கேட்டறிந்து, அவற்றுக்கான தீர்வுகளை வலியுறுத்தியவர். அதனால், தொழிலாளர் சமூகத்தினரிடையே உண்மையான, நம்பகமான தலைவர் என்ற பெயரையும் மரியாதையையும் பெற்றிருந்தார்.

அன்னாரின் மறைவு, மலையகத் தமிழர்களுக்கும், இலங்கை தொழிலாளர் வர்க்கத்திற்கும் பெரும் இழப்பாகவே கருதப்படுகிறது. அவரது விடாமுயற்சி, மக்களுக்கான சேவை, மற்றும் சுயநல மற்றத் தலைமைத்துவம் பலரும் பின்பற்றவேண்டிய வழிகாட்டியாகும்.



அன்னாரின் பூதவுடல் பதுளை, ரிதிபானயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இன்று திங்கட்கிழமையன்று பிற்பகல் 2.00 மணியளவில் இறுதி கிரியைகள் நடைபெற்று பதுளை மாநகர பொது மயானத்தில் பூதவுடக் தகனம் செய்யப்படும்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காலநிலை அவதானிப்பு

நாட்டில் ஏற்படும் பேரிடர் அனர்த்தங்களின் போது அந்த நெருக்கடிகளை எதிர்கொண்டு சமாளிப்பதற்கு மிக முக்கியமான விடயம் நேரத்துடன் கிடைக்கும் முன்னெச்சரிக்கைகள் ஆகும்.

இந்த முன்னெச்சரிக்கை விடயத்தை சரியாக முகாமைத்துவம் செய்யத் தவறியமையினாலேயே கடந்த மாத இறுதியில் புயல், கடும் மழை, பெரு வெள்ளம், மண்சரிவு ஆகிய பிரச்சினைகளை நாடு மோசமாக எதிர்கொண்டு பெரும் பாதிப்புகளை சந்தித்தது என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

இந்தப் பின்புலத்தில் இத்தகைய பேரிடர்கள் தொடர்பான முன்னெச்சரிக்கைகள் குறித்து ஒரு முக்கியமான விடயத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார நேற்றுச் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

நாட்டில் இன்றும் (29 ஆம் திகதியும்) நாளையும் ( 30 ஆம் திகதியும்) மிகமோசமான காலநிலை நிலவும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. ஆனால் பாரிய அச்சுறுத்தலான நிலை இல்லை என்று வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிடுகிறது. காலநிலை தொடர்பில் இவ்விரு தரப்பினருக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன என்பதை குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

காலநிலை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்த அறிவுறுத்தலை அரசாங்கம் அலட்சியப்படுத்தியதன் விளைவை நாட்டு மக்கள் எதிர்கொண்டார்கள். அரசாங்கம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் டித்வா சூறாவளி தாக்கத்தால் பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்காது என்றும் அவர் கூறுகின்றார்.

நாட்டில் இன்றும் நாளையும் அசாதாரண காலநிலை நிலவும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது. ஆனால்அவ்வாறு பாரிய அச்சுறுத்தல் ஏதும் கிடையாது, மழையுடனான காலநிலை மாத்திரமே நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

காலநிலை தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிடுவது உண்மையா அல்லது வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிடுவது உண்மையா என்று கேட்கும் நளின் பண்டார, இது அரச நிறுவனங்களுக்கிடையிலான முரண்பாட்டையும், பரஸ்பர வேறுபாட்டையுமே வெளிப்படுத்துகிறது என்றும் சொன்னார்.

காலநிலை அவதானம், அது தொடர்பான முன்னெச்சரிக்கை போன்றவற்றை வழங்கும் அறிவியல்விஞ்ஞானம்வளர்ந்து எங்கோ நிற்கின்றது. அது சம்பந்தமான தொழில்நுட்பம் உச்சமடைந்துள்ளது. முன்னைய காலம் போல 'மழை வரும். வராமலும் போகலாம்' என்று ஜோதிட சாத்திரம் கூறுவது போல காலநிலை நிலைவரத்தை இரண்டுங் கெட்டானாக அறிவிக்க முடியாது. அத்தகைய பிற்போக்குத் தனமான காலம் மலை ஏறிவிட்டது.

அடுத்த நாள் காலநிலையை மிகத் துல்லியமாக முதல் நாளே கூறும் அளவுக்கு உலகெங்கும் சூழலியல் அவதானம் மற்றும் வானிலை எதிர்வு கூறல் விருத்தி அடைந்துள்ளது. அதனை இலங்கையும் தன் மக்களுக்கு நன்மை தரும் விதத்தில் முன்னெடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட துறையினரை இந்த வழியில் வழிப்படுத்துவது அரசின் முக்கிய பொறுப்பாகும்.

# ஊடக சுதந்திரம் முடக்கப்பட்டால் பொதுமக்கள் வீதிக்கு இறங்குவர்!

## அநுர அரசுக்கு சஜித் அணி கடும் எச்சரிக்கை




"ஊடக சுதந்திரத்தை முடக்கும் வகையில் அநுர அரசு செயற்பட்டால் இந்த அரசுக்கு எதிராக மக்களை வீதிக்கு இறக்குவோம். பொலிஸார் ஒரு தலைபட்சமாகவே செயற்படுகின்றனர்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம் மரிக்கார் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டில் ஜனநாயகம் மற்றும் ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதாகக் குறிப்பிட்டுக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசு தற்போது ஊடகங்களுக்கு எதிராகச் செயற்படுகின்றது.

அரசின் முறைகேடான செயற்பாடுகளை ஊடகங்கள் சுட்டிக்காட்டும் போது அதனை ஏற்றுக்கொள்ளும் மனநிலை அரசுக்குக் கிடையாது. ஊடக சுதந்திரத்தை முடக்கும் வகையில் அரசு செயற்பட்டால் அதன் விளைவு பாரதூரமானதாக அமையும். அரசுக்கு எதிராக மக்களை வீதிக்கு இறக்குவோம்.

ஊடகத்துக்கு எதிராகப் பொலிஸார் தொலைத்தொடர்பு ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்கும் நிலைமை இன்று காணப்படுகின்றது. ஊடகங்கள் முறையற்ற வகையில் செயற்பட்டால் பொலிஸார் ஊடகத்துறை அமைச்சிடம் முறைப்பாடளிக்க வேண்டும். பொலிஸார் அரசின் நோக்கத்துக்கமைய ஒருதலைப்பட்சமாகச் செயற்படுகின்றனர்." – என்றார்.

# தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் ஆசிரியர்களுக்கான ஆங்கில ஆய்வு மாநாடு புதனன்று

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் பிரிவினரால் ஏற்பாட்டு செய்யப்பட்டுள்ள ஆங்கில ஆசிரியர் மாநாடு – 2025 எதிர்வரும் 31ஆம் திகதி, புதன்கிழமை காலை 8.00 மணி முதல் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் சி. கமலராஜன் மற்றும் ஆங்கிலம், வெளிநாட்டு மொழிகள் பிரிவின் இயக்குநரும், பிரதிக்கல்விப் பணிப்பாளருமான பி. என். சுதர்சன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டின் முதன்மை உரையாளராக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஆர்.சுரேந்திரகுமாரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இம்மாநாட்டில், ஆங்கில மொழி கற்பித்தலில் இலக்கியத்தின் பங்கு, ஏ2 மொழி கற்பித்தலில் டிஜிட்டல் கருவிகள், கலப்பு கற்றல் முறை, தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு, மாணவர் ஈடுபாடு மற்றும் ஊக்குவிப்பு போன்ற சமகால விடயங்களில் சிறப்புரைகள் இடம்பெறவுள்ளன.

ஆங்கில ஆசிரியர்களின் தொழில்முறைத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் இம் மாநாடு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.





# சாயி நிலையத்தில் கிறித்தோதய நிகழ்வு

கிறித்தோதயம் மற்றும் புத்தாண்டை வரவேற்கும் ஒளி விழா நேற்று முன் தினம் சனிக்கிழமை கொழும்பு புதுச்செட்டித் தெரு சாயி நிலையத்தில் பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதய நாயகன் தலைமையில் நடைபெற்றது.

புதுச்செட்டித் தெரு வியாகுலமாதா தேவாலய பிரதம பங்கு த்தந்தை அருட் சகோதரர் பீட்டர் சுபராஜ் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு, ஒளி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

சாயி சமூக சேவை ஒருங்கிணைப்பாளர் எஸ். சந்திரகுமாரும் நிகழ்வில் பங்கேற்றார். வியாகுலமாதா தேவாலய அருட்சகோதரரை, சாயி நிலைய பிரதம அறங்காவலர் கௌரவிப்பதைப் படங்களில் காணலாம்.










# தமிழரசின் ஆண்டு இறுதிக் கலந்தாய்வு வவுனியா தாயகத்தில் நேற்று முன்தினம்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் மாவட்டக்கிளை உறுப்பினர்களுடனான வருடத்தின் இறுதி கலந்தாய்வு கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கட்சியின் வவுனியா மாவட்ட அலுவலகமான தாயகத்தில் மாவட்டக்கிளைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய மருத்துவர் ப.சத்தியலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் உபதலைவர் பாலச்சந்திரன் சிந்துஜன், செயலாளர் ந.கருணாநிதி, பொருளாளர் சி.சந்திரசேகரம், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உப தவிசாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் கட்சியின் மாவட்டக்கிளை உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

நிறைவடையும் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்ற தவிசாளர்கள், உறுப்பினர்களின் செயற்திட்ட முன்னேற்றம் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் கட்சியின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.









# மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்திற்குள் திடீரெனப் புகுந்த இருபதுக்கும் அதிக யானைகள்!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசத்திற்குள் 20இக்கு மேற்பட்ட காட்டு யானைகள் நுழைந்தமையை அடுத்து விரைந்து செயற்பட்ட ஜீவராசிகள் பாதுகாப்பு உத்தியோகஸ்த்தர்கள் அந்த யானைகளை காட்டுக்குள் துரத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கரவெட்டி, மகிழவெட்டுவான், நரிப்புல் தோட்டம் போன்ற பல பிரதேசங்களில் நீண்ட நார்களாகக் காட்டு யானைகளின் தொல்லைகளும் அட்டகாசங்களும் அதிகரித்த வண்ணம் உள்ளன என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியிலுள்ள மக்களின் பயன் தரும் தென்னை, வாழை, உள்ளிட்ட பயிரினங்களை காட்டுயானைகள் துவம்சம் செய்து வருகின்றன எனவும் அங்குள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அப்பகுதியைச் சூழ சுமார் இருபதிற்கு மேற்பட்ட காட்டுயானைகள் உலாவித்திரிந்தமையினால் மக்கள் பீதியடைந்தனர்.

அங்குள்ள மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகஸ்த்தர்கள் அப்பகுதிக்கு விரைந்து அப்பகுதி மக்களுடன் இணைந்து காட்டு யானைக் கூட்டத்தை விரட்டுவதற்கு முயற்சி எடுத்தனர். பலத்த பிரயத்தனத்துக்கு மத்தியில் பாதுகாப்பாக காட்டுயானைகள் வனப்பகுதிக்குள் அனுப்பப்பட்டன.

எனினும் காட்டுயானைகள் மக்கள் குடியிருப்புக்களுக்குள் உள்நுளையாமலிருப்பதற்காக அங்குள்ள காட்டு யானைகளை நிரந்தரமாக அப்புறப் படுத்தி, யானைப் பாதுகாப்பு வேலிகளை அமைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.










# கிழக்கு கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் விருதுகள் வழங்கும் விழா நேற்று திருமலையில்

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாண கிராமிய அபிவிருத்திதுறை திணைக்களத்தின் 2025 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண மட்ட விருதுகள வழங்கும் விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் உள்ள இந்து கலாச்சார மண்டபத்தில் நடைபெற்றது.கிழக்கு மாகாண ஆளுநர் ஜெயந்த லால் ரத்னசேகர நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் கிராம அபிவிருத்தி அலுவலர்கள் ஆகியோ ருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, திருகோணமலை மாவட்ட செயலாளர் டபிள்யூ.எம். ஹேமந்த குமார,கிழக்கு மாகாண கல்வி,கலாச்சார கிராமிய அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.







# மண்சரிவு பாதிப்புகளைப் பார்வையிடுவதற்கு மு.கா.தலைவர் ஹக்கீம் மீண்டும் கள விஜயம்

அண்மையில் நிலவிய அசாதாரண கால நிலையின் போது, அதிக மழை வீழ்ச்சியினாலும், மண் சரிவினாலும் கண்டி மாவட்டத்தில் கல்ஹின்னை பகுதியில் பாதிக்கப்பட்ட படகொல்லா தெனிய ஜமாலியா முஸ்லிம் வித்தியாலயம், கல்கொடுவ மற்றும் ஹல்கொல்ல ஆகிய பிரதேசங்களை கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் சென்று பார்வையிட்டமையோடு, மக்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார்.

அதன்போது, நிலைமையை ஆராய்ந்து, மதிப்பீடு செய்து, உரிய முன்னெடுப்புகளை மேற்கொள்வதற்கு தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினர் (NBRO) இன்னும் அங்கு வரவில்லையெனச் சுட்டிக்காட்டப்பட்டது.

படகொல்லாதெனிய ஜெமாலியா முஸ்லிம் வித்தியாலயம் அமைந்துள்ள மலைப் பிரதேசம் பீரிஹெல, துத்திரிப்பிட்டி ஊடாக கல் கொட்டுவையைத் தாண்டி, இரண்டு கிலோமீட்டர் தூரத்துக்கு நீண்டு செல்கின்றது. நிலத்தில் சில இடங்களில் ஆழமான வெடிப்புகள் காணப்படுகின்றன.

அந்த மலைப் பாங்கான பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட பாடசாலை, வீடுகள் ஆகியவற்றை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் சென்று பார்வையிட்டார். கல்கொட்டுவை மண்சரிவில் 11 பேர் புதையுண்டு இறந்துள்ளனர். அவ்வாறே படகொல்லாதெனிய ஜெமாலியா வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்த 11 வயது மாணவர் ஒருவரும் மண் சரிவில் உயிர் நீத்திருந்தார்.

இந்த மலைப் பிரதேசத்தில் வசித்த நூற்றுக்கு மேற்பட்டோர் கடந்த 30ஆம் திகதி அச்சத்தின் காரணமாக அங்கிருந்து வெளியேறிச் சென்றுள்ளனர். தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கையைப் பொறுத்தே அவர்கள் மீண்டும் அங்கு குடியேறுவது சாத்தியமாகலாம்.

இந்தப் பயணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமுடன் கண்டி மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுவின் செயலாளரும், கட்சியின் உயர்பீட உறுப்பினரும், முன்னாள் பன்விலை பிரதேச சபை உறுப்பினருமான எஸ்.ஏ.இத்ரீஸ், கட்சி செயற்பாட்டாளர்களான கல்ஹின்னை ஹபீல் (ஷாபி), அஷ்ரப், ரிஸ்வின் ஆகியோரும் இணைந்திருந்தனர்.

கல்ஹின்னை அனர்த்த நிவாரண குழு உறுப்பினர்களுடன், ஜம்இய்யதுல் பதாஹ் அரபுக் கல்லூரியில் கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றது.

சில நாள்களுக்கு முன்னர், இதே பிரதேசத்திற்கு அண்மையில் மண்சரிவு அனர்த்தத்தினால் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்ட றம்புக்எல கிராமத்திற்கும் அவர் சென்றிருந்ததோடு, நாடாளுமன்றத்திலும் அங்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றிப் பிரஸ்தாபித்து, பிரதமரிடமும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை நேரில் வலியுறுத்தியிருந்தார்.





# அவசரகால நிலை தொடர்ந்தும் அமுலில் அதிவிசேட வர்த்தமானி வெளியாகியது


இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்து அமுல் படுத்தப்பட்ட பொது அவசரகால நிலை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வின்கையொப்பத்துடன்கூடியஅதிவிசேட வர்த்தமானி நேற்று வெளியாகியது.

இலங்கை முழுவதும் நடைமுறைக்கு வரும் வகையில், ஜனாதிபதியினால் பொது அவசரகால நிலை பிரகடனப்படுத் தப்பட்டது.

பொதுமக்களின் பாதுகாப்பு, நாட்டின் அமைதியைப் பாதுகாத்தல் மற்றும் அத்தியாவசிய சேவைகளைப் பேணு தல் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஜனாதி பதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங் களுக்கு இணங்க, இக்கட்டளைச் சட்டத் தின் இரண்டாம் பாகம் இலங்கை முழுவதற்கும் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka
EXTRAORDINARY

අංක 2468/45 - 2025 දෙසැම්බර් 28 වැනි ඉරිදා - 2025.12.28
No. 2468/45 - SUNDAY, DECEMBER 28, 2025

(Published by Authority)

PART I : SECTION (I) — GENERAL

Proclamations & C., by the President

A PROCLAMATION BY THE HON. PRESIDENT

Seal

ANURA KUMARA DISSANAYAKE.

WHEREAS, I am of opinion that by reason of a public emergency in Sri Lanka, it is expedient, so to do, in the interests of public security, the protection of public order and the maintenance of supplies and services essential to the life of the community,

Know ye that, I, Anura Kumara Dissanayake, President, by virtue of the powers vested in me by Section 2 of the Public Security Ordinance (Chapter 40), as amended by Act, No. 8 of 1959, Law No. 6 of 1978 and Act, No. 28 of 1988, do by this Proclamation declare that the provisions of Part II of that Ordinance, shall come into operation throughout Sri Lanka with effect from 28th December, Two Thousand and Twenty Five.

Given at Colombo on the 28th day of December, Two Thousand and Twenty Five.

By Order of the Hon. President,

DR. N. S. KUMANAYAKE,
Secretary to the President.

EOG 12 - 0251

1A - PG 7434 - 358 (12/2025) PRINTED AT THE DEPARTMENT OF GOVERNMENT PRINTING, SRI LANKA.
*This Gazette Extraordinary can be downloaded from www.documents.gov.lk*




# சிலாபம் - கோட்டை ரயில் சேவைகள் இன்று மீண்டும் ஆரம்பமாகின்றன

அதிதீவிர வானிலை காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த புத்தளம் ரயில் மார்க்கத்தில் , கொழும்பு – கோட்டைக்கும் சிலாபத்திற்கும் இடையி லான ரயில் சேவைகள் இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

நாத்தாண்டிய வரை மட்டுப்படுத் தப்பட்டிருந்த ரயில் சேவைகள், திருத் தப்பணிகள் அனைத்தும் நிறைவ டைந்துள்ளதால் இன்று முதல் சிலா பம் வரை முன்னெடுக்கப்படவுள்ளன.

மாலை 04.30, 04.45, 05.18, 06.10 மற்றும் 07.10 ஆகிய நேரங்களில் கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும் ரயில்கள் வழமை போல சிலாபம் வரை பயணிக்கும்.

# வடமராட்சி கிழக்கில் நண்பர்களுடன் கடலில் நீராடிய இளைஞன் மாயம்









யாழ். வடமராட்சி கிழக்கு தாளையடி கடலில் நீராடிய இளைஞன் கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்

உடுத்துறையை சேர்ந்த உதைபந்தாட்ட வீரரான 27 வயதுடைய ஜெசிந்தன் என்பவரே இவ்வாறு கடலில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார்.

மேற்படி இளைஞன் நேற்று பிற்பகல் தனது நண்பர்களுடன் கடலில் நீராடுவதற்காக தாளையடி கடற்கரை சென்றுள்ளார்.

கடற்பகுதியில் நிலவும் சீரற்ற காற்று மற்றும் கடல் கொந்தளிப்பால் இந்த இளைஞன் கடலோடு அடித்துச் செல்லப்பட்டுள்ளார்

இளைஞனுடன் நீராடிய மேலும் இருவரை பொலிஸ் நிலையத்தில் வைத்து மருதங்கேணி பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.



# சுற்றுலாத்துறையில் அசுர வளர்ச்சி: 2018 சாதனையை நெருங்கும் 2025

இலங்கையின் சுற்றுலாத்துறை கடந்த ஆண்டுகளை விட 2025 ஆம் ஆண்டில் மிகப்பெரிய மீட்சியையும் வளர்ச்சியையும் பதிவு செய்துள்ளது.

பொருளாதார நெருக்கடி மற்றும் உலகளாவிய சவால்களைத் தாண்டி, இலங்கை மீண்டும் சர்வதேச பயணிகளின் சொர்க்கபுரியாக மாறியுள்ளதை அண்மைக்கால புள்ளிவிபரங்கள் உறுதிப்படுத்துகின்றன.

இதன்படி 2018 ஆம் ஆண்டுக்குப்பிறகு இலங்கை சுற்றுலாத்துறை மிகச்சிறந்த மீட்சியைப் பதிவு செய்துள்ளது.

இதற்கமைய 2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 2,298,987 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இது 2018 ஆம் ஆண்டின் உச்சக்கட்ட வருகையான 2,333,796-ஐ மிக நெருங்கியுள்ளது.

அத்துடன் கடந்த 2024 ஆம் ஆண்டு முழுவதிலும் 2,053,465 பயணிகளே வந்திருந்த நிலையில், இந்த ஆண்டு அந்த சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டின் ஒவ்வொரு காலப்பகுதியிலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கண்டுள்ளது.

இந்தநிலையில் ஆண்டின் தொடக்கத்திலேயே அதிகபட்சமாக 252,761 சுற்றுலாப் பயணிகள் வருகைதந்து ஒரு பலமான அடித்தளத்தை இட்டுள்ளனர்.

இதனையடுத்து செப்டம்பர் மாதத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையில் 30.2 சதவீத மாதாந்த வளர்ச்சி விகிதம் பதிவாகியுள்ளது.

இதுவே இந்த ஆண்டின் அதிகபட்ச மாதாந்த வளர்ச்சி விகிதமாகும்.

மேலும் டிசம்பர் மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை உச்சத்தை எட்டியுள்ளது.

டிசம்பர் மாதத்தில் 25 நாட்களில் மாத்திரம் 195,394 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அதிலும் டிசம்பர் 25 ஆம் திகதி மாத்திரம் 11,111 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகைதந்துள்ளனர்.

இது 2025 ஆம் ஆண்டில் ஒரே நாளில் பதிவான அதிகப்படியான வருகையாகும் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.



# சென்மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் உள்ளூர் உதைபந்தாட்ட போட்டி ஆரம்பம்

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு சென் மேரிஸ் விளையாட்டு கழகம் வடந்தோறும் நடத்தும் கே.எஸ்.பி.எல் 4 உள்ளூார் உதை பந்தாட்ட தொடரின் ஆரம்பப் போட்டி நேற்று நடைபெற்றது.

வடமராட்சி கிழக்கு கழகங்களுக்கு உட்பட்ட வீரர்களை உள்ளடக்கி அவர்களின் திறமையை மேலும் ஊக்கப்படுத்துவதற்காக வருடாந்தோறும் இந்த விளையாட்டு நிகழ்வு சென்மேரிஸ் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படுகின்றது.

அதனடிப்படையில் தொடரின் ஆரம்ப நிகழ்வு மங்கள விளக்கேற்றப்பட்டு நேற்று சென்மேரிஸ் மைதானத்தில் ஆரம்பமானது.

கே.எஸ்.பி.எல் 4 உள்ளூர் உதைபந்தாட்ட ஆரம்பப் போட்டியில் சஞ்சய் எப்.சி அணியை எதிர்த்து பைட்டர் கிங்ஸ் மோதியது.

போட்டியின் இறுதியில் பைட்டர் கிங்ஸ் அணி 2-0 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.











# மருந்து மாபியாவைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்










"மருந்துப் பொருள் மாபியாவைத் தொடர்வதற்கு மக்கள் அரசாங்கத்திற்கு ஆணை வழங்கவில்லை. தரமற்ற மருந்துப் பொருட்கள் மோசடியை ஒழிப்பதற்கு அரசாங்கம் எடுக்கும் சிறந்த சகல நடவடிக்கைகளுக்கும் எதிர்க்கட்சி பூரண ஆதரவைப் பெற்றுத் தரும்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டு வரும் மூச்சுத் திட்டத்தின் கீழ், பதுளை மாவட்டம், மஹியங்கனை ஆதார வைத்தியசாலைக்கு 46.5 லட்சம் ரூபா மதிப்புள்ள வைத்தியசாலை உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சில வருடங்களுக்கு முன்பு, இந்நாட்டில் மிகவும் ஊழல் நிறைந்த மற்றும் மோசடியான தரமற்ற மருந்து மோசடி நடந்து கொண்டிருந்த வேளை, அதை நாட்டுக்கு வெளிக்கொணர்ந்து, அம்பலப்படுத்தி, அப்போதைய சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கூட ஐக்கிய மக்கள் சக்தியே கொண்டு வந்தது.

அப்போது நடந்து வந்த இந்த தரமற்ற மருந்து மோசடிகள் புதிய அரசாங்கத்துடன் முடிவுக்கு வரும் என்றே கருதப்பட்டன. ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் கீழும் தரமற்ற இந்த மருந்து மாபியா தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் தரமற்ற தடுப்பூசிகளால் இரண்டு பெண்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். தரமற்ற தடுப்பூசிகள் மற்றும் மருந்துப் பொருட்கள் கொள்வனவு மோசடி இன்றும் நடந்தே வருகிறது. மருந்துப் பொருட்கள் மோசடியைத் தொடர்வதற்கு தற்போதைய அரசாங்கத்திற்கு மக்கள் தமது ஆணையைப் பெற்றுத் தரவில்லை.

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட டித்வா சூறாவளியால் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தால் மஹியங்கனை ஆதார வைத்தியசாலை கடுமையாக சேதமடைந்தது.

ஐக்கிய மக்கள் சக்தி தரம் குறைந்த மருந்துப் பொருட்கள் தொடர்பில் குரல் எழுப்பிய சமயங்களில், தற்போதைய அரசாங்கத்தைச் சேர்ந்த அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட இதற்கு ஆதரவு தெரிவித்து மௌனம் காத்து வந்தனர். தரமற்ற மருந்துப் பொருள்கள் கொள்வனவை நிறுத்துவோம் என்று தேர்தல் மேடைகளில் கோஷங்களை எழுப்பிய தற்போதைய ஆளும் தரப்பு அமைச்சர்கள், இன்று மக்களுக்கு தரமற்ற மருந்துகளையும் தடுப்பூசிகளையும் விநியோகித்து வருகின்றனர். தற்போதைய சுகாதார அமைச்சர் உட்பட அனைத்து சுகாதார அதிகாரிகளும் இந்த மருந்துப் பொருட்கள் மாபியாவை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த மருந்துப்பொருள் மாபியாவால் பல்லாயிரக்கணக்கான உயிர்கள் பரிதாபமாக பலியாகி வருகின்றன. மருந்துகள் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் போது, அவை தரமானதா, நுகர்வுக்கு ஏற்றனவா என தகுதிச் சான்றிதழ் வழங்கும் முன்னர், சுகாதார அமைச்சும் போலவே இந்த மருந்துகளின் தரம் தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிசோதனைகள் மூலமும் சர்வதேச நிறுவனங்கள் மூலமும் இவை ஆராயப்பட வேண்டும். நமது நாட்டில் இன்னும் மருந்துகளின் தரத்தை சரிபார்க்கக்கூடிய பரிசோதனை ஆய்வு கூடமோ வசதிகளோ இல்லை. இதற்கான ஆய்வு கூட வசதிகளை நாம் நிறுவ வேண்டும்.

நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் தொடர்பான பொறுப்பிலிருந்து அமைச்சரும் உரிய அதிகாரிகளும் தப்பிக்க முடியாது. முன்னாள் அமைச்சரைப் போலவே தற்போதைய சுகாதார அமைச்சரும் இந்தப் பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது. 220 லட்சம் மக்கள் சார்பாக ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் வீதிகளில் இறங்கி, இந்த தரமற்ற மருந்து மோசடியை நடத்தும் அனைவருக்கும் எதிராகவும் இந்த மாபியாவிற்கு எதிராகவும் போராடும்.

அவ்வாறே, இந்த தரமற்ற மருந்துப் பொருட்கள் மோசடியை ஒழிப்பதற்கு இந்த அரசாங்கம் எடுக்கும் சிறந்த சகல நடவடிக்கைகளுக்கும் எதிர்க்கட்சி பூரண ஆதரவைப் பெற்றுத் தரும். அடிப்படையானதும் மனித உரிமையாகவும் காணப்படும் சுகாதார நலன் கருதி, சேனக பிபில மருந்துக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும்."– என்றார்.




# நிவாரணப் பொருள்கள் திருட்டு; பொலிஸார் தீவிர விசாரணை

டித்வா சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவிருந்த உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய 55 பொதிகள் திருடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளம் – கற்பிட்டி மண்டலகுடா பகுதியில் இந்தசம்பவம் இடம்பெற்றுள்ள தாக பொலிஸ் குறிப்பிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில், மண்டலகுடா கிராம உத்தியோகத்தர் முன்வைத்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள் ளன என கற்பிட்டி பொலிஸ் தெரிவித் துள்ளது.

அனர்த்தங்களினால் குறித்த பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்க–ாக விநியோகிக்கப்பட்டதன் பின்னர் எஞ்சிய உலர் உணவுப் பொருள்கள் அடங்கிய 181 பொதிகள் அந்த பகுதியிலுள்ள வீடொன்றில் வைக்கப்பட்டன என கிராம உத்தியோகத்தர் குறிப்பிட் டுள்ளார்.

அதற்கமைய, சுமார் 220,000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகளே திருடப்பட்டுள்ளன என கிராம உத்தியோகத்தரின் முறைப் பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காலநிலை முன்னறிவிப்பில் முரண்பாடு: நளின் பண்டார எம்.பி. குற்றச்சாட்டு



"நாட்டில் இன்றும், நாளையும் மிகமோசமான காலநிலை நிலவும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது. ஆனால், பாரிய அச்சுறுத்தலான நிலை இல்லை என்று வளிமண்டலவியல் திணைக் களம் குறிப்பிடுகிறது. காலநிலை தொடர் பில் இவ்விரு தரப்பினருக்கும் இடை யில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படு கின்றன."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித் தார்.


கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"காலநிலை தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்த அறிவுறுத்தலை அரசாங்கம் அலட்சியப் படுத்தியதன் விளைவை நாட்டு மக்கள் எதிர்கொண்டார்கள். அரசாங்கம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் தித்வா சூறாவளி தாக்கத்தால் பாரிய உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்காது.

நாட்டில் இன்று திங்கள் கிழமை, நாளை செவ்வாய்க் கிழமை அசாதாரண காலநிலை நிலவும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலை; யம் குறிப்பிட்டுள்ளது. ஆனால் அவ்வாறு பாரிய அச்சுறுத்தல் ஏதும் கிடையாது. மழையுடனான காலநிலை மாத்திரமே நிலவும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள் ளது.

காலநிலை தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிடுவது உண்மையா அல்லது வளிமண்டலவியல் திணைக்களம் குறிப் பிடுவது உண்மையா, இது அரச நிறுவனங்களுக்கிடையிலான முரண்பாட் டையும், பரஸ்பர வேறுபாட்டையுமே வெளிப்படுத்துகிறது." – என்றார்.





# இலங்கை சிறையில் இருந்து 61 மீனவர்களை விடுவிக்க மத்திய அரசின் நடவடிக்கை தேவை

## முதல்வர் ஸ்டாலின் கடிதம்

இலங்கை காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவிக்கவும் உரிய தூதரக வழிகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்தி வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கரும், தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தி கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் முதல்வர் மேலும் குறிப்பிடுகையில்,

"ராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 27.12.2025 அன்று மீன்பிடிக்கச் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று மீனவர்களை அவர்களது மீன்பிடிப் படகுடன் இலங்கை கடற்படையினர் நேற்று கைது செய்த மற்றொரு சம்பவத்தை வெளியுறவுத் துறை அமைச்சர் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

தமிழக மீனவர்களும் அவர்களது மீன்பிடிப் படகுகளும் இலங்கை அதிகாரிகளால் சிறை பிடிக்கப்படுவது தங்குதடையின்றி தொடர்ந்து நடைபெற்று வருவது கவலையளிக்கிறது. இக்கைது நடவடிக்கைகள் நமது மீனவர்களின் வாழ்வாதாரத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய நிலவரப்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்த 248 மீன்பிடிப் படகுகளுடன், 61 மீனவர்களும் இலங்கை அதிகாரிகளின் காவலில் உள்ளன.

எனவே எதிர்காலத்தில் இது போன்ற கைது சம்பவங்கள் நிகழாமல் தடுக்கவும், இலங்கை காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவாக விடுவிக்கவும் உரிய தூதரக வழிகளை உடனடியாக மேற்கொள்ள வலியுறுத்துகிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

# தி.மு.க. ஆட்சியில் சிறுமி முதல் பாட்டி வரை தமிழ் நாட்டில் எவருக்கும் பாதுகாப்பு இல்லை

## எடப்பாடி பழனிசாமி விமர்சனம்

லஞ்சம், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, கொலை, கொள்ளை பாலியல் சீண்டல், சிறுமி முதல் பாட்டி வரை பாதுகாப்பு இல்லை என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' எழுச்சிப் பயணத்தின் 6 ஆவது கட்டப் பிரசாரத்தில் நேற்று மாலை திருப்போரூர் தொகுதியில் மக்களை சந்தித்த அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, அடுத்ததாக சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பெருங்குடி, எம்.ஜி.ஆர். பிரதான வீதி திறந்தவெளித் திடலில் பிரச்சாரம் செய்தார்.

அப்போது அவர் உரையாற்றுகையில்,

"தி.மு.க. 200 இடங்களில் வெல்லும் என்று ஸ்டாலின் பேசுகிறார். உண்மையில் அ.தி.மு.க. கூட்டணியே 210 இடங்களில் வெல்லும். நான்கே முக்கால் ஆண்டு காலம் தி.மு.க. அரசு மக்களிடம் மிகுந்த வெறுப்புக்கு ஆளாகிவிட்டது. லஞ்சம், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு, கொலை, கொள்ளை பாலியல் சீண்டல், சிறுமி முதல் பாட்டி வரை பாதுகாப்பு இல்லை. இப்படிப்பட்ட அலங்கோல ஆட்சி அகற்றப்பட வேண்டும். சட்டம் ஒழுங்கு டி.ஜி.பியை கூட நியமிக்காத அரசு. உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் சொல்லியும், யு.பி.எஸ்.சி மூலம் 3 பேர் தேர்வு செய்து அனுப்பியும் இதுவரை



நியமிக்கவில்லை, அதற்கு காரணம் இவர்களுக்கு ஜால்ரா போடும் டி.ஜி.பி. கிடைக்கவில்லை. திறமையான டி.ஜி.பி. வந்தால் தான் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படும்.

பொறுப்பு டி.ஜி.பி. விடுமுறையில் சென்றால், அதற்கும் பொறுப்பு டி.ஜி.பி. நியமித்த பொறுப்பில்லாத முதல்வர் ஸ்டாலின். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இப்படி அலங்கோல ஆட்சியைப் பார்க்க முடியவில்லை. முறையாக நிரந்தர டி.ஜி.பி. நியமித்தால் தான் மக்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும். இவர்களுக்கு வேண்டப்பட்ட டி.ஜி.பி. நியமிக்க வேண்டும் என்பது கண்டிக்கத்தக்கது.

இந்த ஆட்சியில் எல்லாமே ஊழல். தமிழ்நாடு முழுவதும் 6 ஆயிரம் மதுக்கடை, பெரும்பாலான பார்களை திமுகவினர் எடுத்துக்கொண்டனர். அந்த 'பார்களில்' முறைகேடாக மதுபானம் விற்பது வேறு கதை. டாஸ்மாக்கில் ஒரு நாளைக்கு ஒன்றரை கோடி போத்தல்கள் விற்கிறது, ஒரு போத்தலுக்கு 10 ரூபா கூடுதலாக பெறுவதால் நாளொன்றுக்கு 15 கோடி இந்திய ரூபாயும், மாதத்துக்கு 450 கோடி இந்திய ரூபாயும், வருடத்துக்கு 5,400 கோடியுமாக இந்த நான்காண்டுகளில் 22 ஆயிரம் கோடி இந்திய ரூபா கொள்ளை அடித்திருக்கிறார்கள். மேலிடத்துக்கு அனுப்புகிறார்கள். மேலிடம் யார் என்றால், ஸ்டாலின் குடும்பம்தான். இந்த அரசு தொடர வேண்டுமா? ஊழல் அரசை அகற்றுவீர்களா?

நிதியமைச்சராக இருந்த பழனிவேல் தியாகராஜன், 30 ஆயிரம் கோடி இந்திய ரூபாவை உதயநிதியும், சபரீசனும் வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று பேசினார். அதற்கு இதுவரை ஸ்டாலின் வாய் திறக்கவில்லை." என்று தெரிவித்துள்ளார்.



# குண்டுவெடிப்புகளுக்கு மத்தியில் மியன்மாரில் ஆரம்பமான தேர்தல்

## ஐ.நா. கடும் அதிருப்தி

குண்டுவெடிப்புகளுக்கு மத்தியில் மியன்மாரில் நேற்று ஆரம்பமான தேர்தல் ஒரு ஏமாற்று நிகழ்வென தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநிலையில், முக்கிய அரசியல் கட்சிகள் கலைக்கப்பட்டுள்ளதுடன், பல தலைவர்கள் சிறையடைக்கப்பட்டுள்ளனர்.

மேலும், நாட்டில் நிலவும் உள்நாட்டுப்போர் காரணமாக பெரும்பாலான மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் என அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இராணுவ ஆட்சி ஸ்தாபிக்கப்பட்டு 5 ஆண்டுகளுக்குப் பின்னர் நடைபெறும் தேர்தல் பல கட்டங்களாக நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வாக்களிப்பைத் தடுப்பவர்கள் அல்லது எதிர்ப்பவர்களுக்கு மரண தண்டனை உட்பட கடுமையான தண்டனைகள் வழங்கப்படும் என இராணுவம் தெரிவித்துள்ளது.

புதிய இராணுவ சட்டத்தின் கீழ் 200 இற்கும் அதிகமானவர்கள் மீது ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நேற்று வாக்குப்பதிவு ஆரம்பமான நிலையில், நாட்டில் குறைந்தது இரண்டு பகுதிகளில் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என தகவல்கள் தெரிவிக்கின்றன.

எறிகணை தாக்குதலில் மூவர் காயமடைந்துள்ளனர் எனவும் அவர்களில் ஒருவரது நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர, தாய்லாந்து எல்லையை அண்மித்த பிரதேசத்தில் இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் 10 வீடுகள் சேதமடைந்துள்ளன.

இந்த சம்பவத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மூவர் படுகாயமடைந்துள்ளனர் என உள்ளூர் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, மியன்மார் இராணுவ ஆட்சிக் குழுவின் தலைவர் மின் ஆங் ஹ்லேங் தேர்தல் வாக்குப்பதிவு சுதந்திரமாகவும் நீதியாகவும் நடைபெறுவதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டை மீண்டும் பல கட்சி ஜனநாயக ஆட்சி முறைமைக்குக் கொண்டு வருவதே தமது நோக்கம் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த தேர்தலில் வாக்களிக்க மறுப்பவர்கள் ஜனநாயகத்தை நோக்கிய முன்னேற்றத்தை நிராகரிப்பவர்களாக கருதப்படுவார்கள் என அவர் எச்சரித்துள்ளார்.

இராணுவ ஆட்சியினையும் தனது அதிகாரத்தையும் நிலைநிறுத்தி அங்கீகாரத்தை பெறும் நோக்கில் சீனாவின் ஆதரவுடன் இராணுவ ஆட்சிக்குழு இந்த தேர்தலை நடத்துவதாக அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இந்த நிலையில், ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க் மியன்மாரின் தற்போதைய களநிலைமை குறித்து அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

கருத்துச் சுதந்திரம், ஒன்றுகூடல் அல்லது அமைதியான முறையில் கூடுவதற்கான மக்களின் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.







# மேற்குலக நாடுகளுடன் முழு அளவிலான போர்!

## ஈரான் ஜனாதிபதியின் அதிரடி கருத்து

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் ஈரான் ஒரு முழு அளவிலான போரில் ஈடுபட்டுள்ளதாக ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நடைபெற்ற நிலையில், இந்த கருத்து வெளியாகியுள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஐரோப்பா ஆகிய நாடுகள் ஈரானின் நிலைத்தன்மையை சீர்குலைக்க விரும்புவதாகவும், அவற்றுடன் ஈரான் போரில் ஈடுபட்டுள்ளதாகவும் ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன் குறிப்பிட்டுள்ளார்.

ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் இணையதளத்தில் வெளியான நேர்காணலில், தற்போதைய சூழலானது 1980களில் ஈராக் உடன் நடைபெற்ற போரை விட மோசமானது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் 1980-1988 ஆம் காலப் பகுதியில் நடைபெற்ற போரை விட, தற்போதைய மேற்குலக நாடுகளுடனான மோதல் மிகவும் சிக்கலானது மற்றும் கடினமானது என்று அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா நடத்திய 12 நாள் வான்வழித் தாக்குதலில் மூத்த இராணுவத் தளபதிகள் மற்றும் அணுசக்தி விஞ்ஞானிகள் உட்பட சுமார் 1,100 ஈரானியர்கள் கொல்லப்பட்டனர்.



இதற்குப் பதிலடியாக ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் இஸ்ரேலில் 28 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# குவாத்தமாலாவில் பஸ் விபத்து: 15 பேர் உயிரிழப்பு, பலர் காயம்



மேற்கு குவாத்தமாலாவில் உள்ள சோலோலா பகுதியில் நேற்று அதிகாலை நிகழ்ந்த கோரமான வீதி விபத்தில் சிக்கி குறைந்தது 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

பயணிகள் பஸ் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து ஆழமான பள்ளத்தாக்கில் விழுந்ததில் இந்த சம்பவம் நேர்ந்துள்ளது.

குவாத்தமாலாவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள நெடுஞ்சாலையில் இந்தப் பேருந்து பயணிகளைஏற்றிக் கொண்டு சென்றுள்ளது.

விபத்து நடந்த பகுதியில் மிக அடர்த்தியான பனிமூட்டம் நிலவியதாகவும், இதனால் ஓட்டுநருக்கு வீதி சரியாகத் தெரியாததால் இந்த விபத்து நேர்ந்திருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

விபத்து குறித்துத் தகவல் அறிந்ததும் சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர், பள்ளத்தாக்கில் விழுந்து சிதைந்த பஸ்ஸில் இருந்து பாதிக்கப்பட்டவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்த விபத்தில் 11 ஆண்கள், 3 பெண்கள் மற்றும் ஒரு குழந்தை உட்பட மொத்தம் 15 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

படுகாயமடைந்த சுமார் 19 பயணிகள் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவமனை தகவல்களை மேற்கோள்காட்டி சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# வட மாகாணத்தின் பொருளாதார மாற்றத்திற்கான முக்கிய மேடையாக வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு

## 2026 ஜனவரி 21,22இல் யாழ். திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில்



- ராஜ் சிவநாதன் -

இலங்கையின் வட மாகாணம் நீண்ட காலமாக எதிர்கொண்ட கட்டமைப்பு குறைபாடுகள், முதலீட்டு பற்றாக்குறை மற்றும் பொருளாதார வாய்ப்புகளின் சமச்சீர் இல்லாமை ஆகிய சூழ்நிலைகளுக்கு மத்தியில், வட மாகாண முதலீட்டு மாநாடு 2026 (Northern Investment Summit – NIS 2026) ஒரு முக்கிய திருப்புமுனையாக உருவெடுத்து வருகிறது.

“Empowering Growth, Insightful Innovations” என்ற கருப்பொருளின் கீழ், இந்த மாநாடு 2026 ஜனவரி 21 மற்றும் 22 ஆகிய தினங்களில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை முகாமைத்துவக் கழகம் (The Management Club – TMC) ஏற்பாடு செய்யும் இந்த மாநாட்டின் முதன்மை நோக்கம், வட மாகாணத்தில் உள்ள பயன்படுத்தப்படாத பொருளாதார ஆற்றல்களை அடையாளம் கண்டு, நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட முதலீட்டு மேடையை உருவாக்குவதாகும். அரசாங்க உயர் அதிகாரிகள், தனியார் துறைத் தலைவர்கள், சர்வதேச முதலீட்டாளர்கள், கல்வி மற்றும் ஆய்வு நிபுணர்கள் உள்ளிட்ட பல்துறை பங்குதாரர்களை ஒரே மேடையில் இணைப்பதே இந்த மாநாட்டின் முக்கிய தனித்துவமாகும்.

### வட மாகாண அபிவிருத்திக்கான ஒரு தொழில்முறை முயற்சி

24 ஆண்டுகளுக்கும் மேலான நிர்வாக மற்றும் தொழில்முறை அனுபவத்தைக் கொண்ட இலங்கை முகாமைத்துவக் கழகம் – கொழும்பு, கல்கிஸை, மொரட்டுவை, வத்தளை, நீர்கொழும்பு

தொடர்ச்சி...



# வட மாகாணத்தின் பொருளாதார மாற்றத்திற்கான முக்கிய மேடையாக வடக்கு முதலீட்டு உச்சிமாநாடு

## 2026 ஜனவரி 21,22இல் யாழ். திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில்

தொடர்ச்சி...

மற்றும் யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் தனது கிளைகளை நடத்தி வருகிறது. யாழ்ப்பாணக் கிளை, பேராசிரியர்கள், வங்கி முகாமையாளர்கள் மற்றும் மூத்த தொழில்முறை நிபுணர்கள் அடங்கிய ஒரு செயற்பாட்டுள்ள அமைப்பாக இன்று வளர்ந்துள்ளது.

வட மாகாண வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான ஒரு தொழில்முறை மேடையாக!இலங்கை முகாமைத்துவக் கழகம் செயல்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையிலேயே NIS 2026 திட்டம் உருவாக்கப்பட்டது. இந்த முயற்சிக்கு தொழில் அமைச்சு, நிதி அமைச்சு, முதலீட்டு சபை (BOI), ஏற்றுமதி மேம்பாட்டுச் சபை (EDB) உள்ளிட்ட பல அரச நிறுவனங்களின் ஆதரவும் கிடைத்துள்ளது.

மேலும், சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபை (SLTDA), சிறு தொழில் மேம்பாட்டு பிரிவு (SEDD), கடற்றொழில் அமைச்சு மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ஆகியனவும் இந்த முயற்சியில் இணைந்துள்ளன.

### தரவுகள் அடிப்படையிலான முதலீட்டு திட்டங்கள்

வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள முதலீட்டு வாய்ப்புகளைத் துல்லியமாக அடையாளம் காணும் நோக்கில், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளுடன் நேரடி கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்திற்குமான தரவுகள் ஒரே மாதிரியான படிவத்தில் சேகரிக்கப்பட்டு, விரிவான ஆய்வுகளுக்குப் பின் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு, NIS 2026 இன் அறிவுசார் பங்காளராக செயல்படும் KPMG நிறுவனம், ஐந்து மாவட்டங்களுக்கும் உரிய ஐந்து விரிவான முதலீட்டு முன்மொழிவுகளை தற்போது தயாரித்து வருகிறது. இவை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும், குறிப்பாக புலம்பெயர் இலங்கையர்களுக்கும் முன்வைக்கப்படவுள்ளன.

### முன்னுரிமைத் துறைகளும் எதிர்கால இலக்குகளும்

விவசாயம் மற்றும் மீன்பிடி, கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பம், சுற்றுலா மற்றும் எரிசக்தி ஆகிய துறைகள் NIS 2026 இன் முக்கிய கவனமாக உள்ளன. இதனுடன், சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில்கள் (SMEs) மற்றும் புத்தாக்க நிறுவனங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

வட மாகாணத்தில் கடல் அட்டை, கடல் பாசி வளர்ப்பு போன்ற நிலையான மீன்வளத் திட்டங்கள், தகவல் தொழில்நுட்ப முதலீடுகள் மற்றும் டீமுஜ வலயங்கள் உருவாக்கம் ஆகியவை குறிப்பிடத்தக்க வாய்ப்புகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன. குறிப்பாக காங்கேசன்துறை BOI வலயம் தகவல் தொழில்நுட்பத் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் ஆண்டுகளில் வட மாகாணத்தை "இலங்கையின் முக்கிய பொருளாதார மதிப்பீடு மையவேலி"யாக மாற்றுவது ஒரு முக்கிய இலக்காகக் குறிப்பிடப்படுகிறது.

### கட்டமைப்புச் சவால்களும் கொள்கைத் தேவைகளும்

வட மாகாண அபிவிருத்திக்கான முக்கிய தடைகளாக போக்குவரத்து, லாஜிஸ்டிக்ஸ் மற்றும் அடித்தள வசதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் எதிர்கால விரிவாக்கம், தனித்த கன்டெய்னர் ரயில் பாதை, லாஜிஸ்டிக்ஸ் மையங்கள் மற்றும் நெடுஞ்சாலை இணைப்புகள் ஆகியவை முதலீடுகளை ஈர்க்கும் அடிப்படை தேவைகளாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன.

மேலும், வட மாகாணத்திற்கென தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட ஒரு விசேட முதலீட்டு ஊக்கத் திட்டம் (Special Investment Scheme) அவசியம் என்பதும் வலியுறுத்தப்படுகிறது. அரச – தனியார் கூட்டுத் திட்டங்கள் (PPP) மூலமாக பெரிய அளவிலான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதே நடைமுறைக்கு ஏற்ற வழியாக கருதப்படுகிறது.

### தேசிய பொருளாதாரத்திற்கு ஒரு வாய்ப்பு

தற்போது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 4.5 சதவீதம் மட்டுமே பங்களிக்கும் வட மாகாணத்தை அபிவிருத்தி செய்வது, முழு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் சாதகமாக அமையும். புலம்பெயர் சமூகம், உள்நாட்டு முதலீட்டாளர்கள், பிராந்திய தொழிலதிபர்கள் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்கள் ஆகிய அனைவரையும் ஒன்றிணைக்கும் ஒரு மேடையாக NIS 2026 செயல்படுகிறது.

வட மாகாணத்தில் உள்ள "மறைக்கப்பட்ட முதலீட்டு வாய்ப்புகளை" வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதே இந்த மாநாட்டின் மைய நோக்கமாகும். இந்த முயற்சியின் மூலம், வட மாகாணம் இலங்கையின் அடுத்த முக்கிய பொருளாதார வளர்ச்சி மையமாக மாறும் என்ற எதிர்பார்ப்பு வலுப்பெறுகிறது.

தொடர்புகளுக்கு: https://nis26.walkersevent.com/ https://www.nis26.lk/

# சட்டவிரோத மணல் அகழ்வு: தருமபுரத்தில் ஐவர் சிக்கினர்



கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே, இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் மணல் அகழ்வதற்கு அனுமதி பெற்றுள்ளதுடன், அந்த அனுமதிப் பத்திரத்தைப் பயன்படுத்தி கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டனர் என்று தருமபுரம் பொலிஸார் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

அத்துடன், மணல் அகழ்வுக்காகப் பயன்படுத்தப்பட்ட ஐந்து டிப்பர்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களுக்கு எதிராக மேலதிக சட்ட நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 29.12.2025




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று கவனம் இழக்க வாய்ப்புள்ளது. அதனால் பின் தங்கியிருப்பீர்கள்.உங்கள் செயல்களில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வதன் மூலம் கடினமான சூழ்நிலையை சமாளிக்க இயலும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணியில் பலன்கள் உங்களுக்கு சாதமாக அமைய திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அவரை நண்பர் போல நடத்துவதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று மிதமான பணப்புழக்கம் காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகளை நிர்வகிப்பது கடினமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் கடன் வாங்க நேரலாம்.




இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. மன சஞ்சலம் காரணமாக சாதகமான விளைவுகள் காண்பதில் தடை இருக்கும்.

பணியில் வளர்ச்சி சிறிது குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் கட்டுப்பாட்டை இழக்க நேரலாம் எனவே சகஜமான அணுகுமுறை தேவை. அமைதியான முறையில் விஷயங்களை ஏற்றிக் கொள்வதன் மூலம் அன்பும் மதிப்பும்பெருகும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிக பொறுப்புகள் காணப்படும்.உங்கள் குடும்பத்திற்கு அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.




அதிக பொறுப்புகளும் பதட்ட நிலையம் காணப்படும். இறை வழிபாட்டின் மூலம் உங்கள் மனதை கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில் உங்களுக்கு திருப்தி இருக்காது. பணியிடச் சூழலும் சிறப்பாக இருக்காது.

குழப்பமான மனநிலை காரணமாக ஸ்திரத்தன்மை குறைந்து காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை நல்ல விதத்தில் பகிர்ந்து கொள்ள இயலாது.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும். பெரிய அளவிலான புதிய முதலீடு சம்பந்தமான எந்த விதமான முடிவையும் எடுக்காதீர்கள்.

இன்று செரிமானம் சம்பந்தமான பிரச்சினை இருக்கும்.




இன்று உற்சாகமான நாளாக இருக்காது.இன்று அதிக பலன்கள் எதிர்பார்க்க இயலாது. குழப்பம் நிலவும். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு உதவிகரமாக இருக்கும். குழந்தைகளின் முன்னேற்றமும் நீங்கள் எதிபார்க்கும் வகையில் இருக்காது.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். இன்று நீங்கள் திட்டமிட்டு ஆற்றலுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் பராமரிக்க நீங்கள் எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. காய்ச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நீங்கள் மிகவும் யதார்த்தமாக இருக்கவேண்டியது அவசியம். உங்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதன் மூலம் உங்கள் நம்பிக்கை அதிகரிக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

சிறந்த பலன்களைக் காண இன்று நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். இதன் மூலம் உங்களுக்கு திருப்தி உண்டாகும்.

உங்கள் மனதில் அகந்தை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும்.

பொறுப்புகள் அதிகரிப்பதன் காரணமாக இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.சூழ்நிலையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று சற்று அனுகூலம் குறைவான நாள். இன்று நீங்கள் அதிர்ஷ்டத்தை விட உங்கள் முயற்சியை சார்ந்து செயல்பட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகள் இறுக்கமாக காணப்படும். ஓய்வெடுக்க நேரம் குறைவாக காணப்படும். சிறப்பான பலன் காண திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராமரிக்க இயலாது. எனவே எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் நலனை மேம்படுத்தும் சில பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம். இன்று திருப்தி நிலவும்.

உங்கள் பணியில் சுமூகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை உறவை பராமரிப்பீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல நட்புணர்வு மேம்படும்.

உங்கள் கையில் உள்ள பணம் போதுமானதாக இருக்கும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பும் அதிகம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் திருப்தி காரணமாக சிறந்த ஆரோக்கிய நிலை இருக்கும்.

# இன்றைய ராசி பலன்ள் - 29.12.2025




இன்று பொதுவாக சிறந்த நாள். நீங்கள் மிகவும் கவனமாக செயலாற்ற வேண்டும். புத்திசாலித்தனத்தை மேம் படுத்திக் கொள்வது நல்லது.

உங்களுள் மறைந்திருக்கும் திறமை களை வெளிக்கொணர்வதன் மூலம் திருப்தி காண்பீர்கள். உங்கள் பணிகள முடிப்பதற்கு இது பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப் படையாகப் பழகுவீர் கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வை பராமரிக்க இயலும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.உங்கள் தேவை களை பூர்த்தி செய்து கொள்வீர்கள். புதிய முதலீடு போன்ற முக்கிய முடிவுகள நீங்கள் எடுக்கலாம்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




ஏழை மற்றும் உடல் ஊனமுற்றோ ருக்கு தானங்கள் மற்றும் தொண்டு செய்ய இன்றைய நாளை பயன்படுத் திக் கொள்ளுங்கள்.இதனால் கடவுளின் ஆசியும் மகிழ்ச்சியும் கிட்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வும்.

இன்று அதிக பணிகள் இருப்பதாக உணர்வீர்கள். இன்று திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும். சக பணியாளர்களால் தொல்லைகளை சந்திப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அதிகமாக பேசுவதை தவிர்க்கவும். நீங்கள் இருவரும் இடைவெளியுடன் பழகுவது நல்லது. இதனால் விரும்பத்தகாத சூழ் நிலைகளை தவிர்க்க லாம்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இன்று அதிக பொறுப்புகளை சந்திக்க வேண்டியிருக்கும்.




இன்றைய நாளில் சில போராட்டங்கள் இருக்கும் என்பதால் பொறுமையாக கையாள வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது போராட்டங்களை சந்திப்பீர்கள். சக பணியாளர் களுடன் நல்லுறவு பராமரிப்பதில் பிரச்சினை காணப்படும்.

உங்கள் துணையுடன் கவனமாகப் பேசவும். இன்று நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர் கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. இன்று தேவை யற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவ லையை ஏற்படுத்தும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைய முடியும். இன்று நீங்கள் சிறந்த திட்டங்கள் மூலம் பயன் பெறுவீர்கள்.

இன்று உங்கள் பணிக்கு பாராட்டு பெறுவீர்கள். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்தில் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று வலுவான நிதி ஆதாரத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக் கும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரண மாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




# அயலவர்களுக்கிடையில் மோதல்! ஆண் ஒருவர் அடித்துக் கொலை!!

அயலவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் கொலையில் முடிந்துள்ளது.

இரத்தினபுரி – அயகம, சமருகம பகுதியில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 57 வயதுடைய ஆண் ஒருவர் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட நபர் பலத்த காயங் களுடன் இரத்தினபுரி வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சமருகம பிரதேசத்தைச் சேர்ந்த நபரே உயிரிழந்துள்ளார்.

ஆரம்பகட்ட விசாரணைகளின் படி, உயிரிழந்தவருக்கும் அவரது அயலவர் ஒருவருக்கும் ஏற்பட்ட தனிப் பட்ட முரண்பாடே இந்தத் தாக்குதலுக் குக் காரணம் எனத் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக 40 வயதுடைய சந்தேகநபர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை அயகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.